13.08..2024

**கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.**

**அமர்வு வழக்கு எண். 107/2018**

அ.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமசந்திரன் | | |
| த/பெ | ஏழுமலை | | |
| கிராமம் | கண்டம்பாக்கம் | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 41/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

**இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.**

**முதல் விசாரணை**

**நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது** விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் அனைவரும் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் தான். இதற்கு முன்பு சாட்சி சொன்ன சீனிவாசன் அ.சா.1 என் அண்ணன்தான். இந்த வழக்கில் இறந்து போன முருகன் என்பவர் என் அண்ணன் தான். இந்த வழக்கில் இறந்து போன வீரம்மா என் அண்ணி. என் அண்ணன் முருகனுக்கு திண்டிவனம் நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் சொல்ல சம்மன் வந்தபோது நானும் அதில் உடன் இருந்து கையெழுத்து போட்டேன். மறுநாள் நீதிமன்றத்திற்கு போகலாம் என நான் அவரிடம் சொன்னேன். அவர் என்னிடம் சரி போய் படுடா என்று சொன்னார். அதிகாலை விடிவதற்கு முன்பு அனைவரும் கத்தினார்கள். நான் இருக்கும் வீட்டிற்கும் என் அண்ணன் இருக்கும் வீட்டிற்கும் தூரம் சுமார் 50 மீட்டர் தான் எனவே எனக்கு கத்தும் சத்தம் கேட்டது. நான் என் அண்ணன் வீட்டிற்கு சென்று பார்த்தபோது அங்கு கும்பலாக பொது மக்கள் இருந்தார்கள். அண்ணி கத்தி கொண்டிருந்தார். திண்ணை பூராவும் இரத்தமாக இருந்தது. என் அண்ணன் அங்கே கழுத்துக்கு நேராக அறு பட்டு கீழே கிடந்தார். இரத்தம் சுவர் முழுவதும் தெறித்து இருந்தது. அதன் பிறகு மருத்துவமனைக்கு அவரின் பிரேதத்தை

எடுத்து சென்று பிறகு மறுநாள் தான் எடுத்து வந்தார்கள். என் அண்ணன் வழக்கறிஞர் ஆறுமுகம் இறந்த பிறகு நான் மனஉளைச்சல் அடைந்து மருந்து சாப்பிட்டு வந்தேன். சம்பவம் பற்றி போலீஸ் என்னை விசாரித்தார்கள். தற்போது எனக்கு ஞாபகமில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலீசார் விசாரணையில் போலீசார் என்னை முண்டியம்பாக்கம் மருத்துவமனை பிண அறையின் முன்பு விசாரணை செய்தபோது நான் சம்பவத்தை அ.சா. சீனிவாசன் என்பவர் சொன்னதை கேள்விபட்டு போலீசார் விசாரணையில் 16.09.2014ம் தேதியில் என் மூத்த அண்ணன் சீனிவாசன் முருகன் கொலை சம்மந்தமாக அவர் நேரில் பார்த்த உண்மைகளை என்னிடம் சொன்னார் என்றும், சம்பவத்தன்று அதிகாலையில் அ.சா.1 சீனிவாசன் அவரது நிலத்தில் தண்ணீர் பாய்ச்சுவதற்காக சென்ற போது எதிரிகள் ராதாகிருஷ்ணன், வீரபத்திரன், ரகு, சத்தியசீலன், பிரதாப், அன்பரசன், புகழேந்தி, சிவகுமார், விநாயகமூர்த்தி ஆகியோர்கள் கும்பலாக கத்தி, தடி போன்ற ஆயுதங்களுடன் முருகன் வீட்டிற்கு சென்றபோது பார்த்ததாகவும், முருகன் அவரது வீட்டின் திண்ணையில் படுத்து இருந்தபோது எதிரிகள் சூழ்ந்து கொண்டு ராதாகிருஷ்ணன், சத்தியசீலன், ரகு ஆகியோர்கள் கழுத்தில் மாறி மாறி வெட்டி விட்டும் முருகன் மனைவி சத்தம்போடவே ஊர் மக்கள் வந்தவுடன் எதிரிகள் தப்பி ஓடி விட்டார்கள் என்றும், அ.சா.1 சொன்னதை போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றும், அதன் பிறகு போலீசார் 16.09.2014ம் தேதியில் என் வீட்டிற்கு வந்து மறுவிசாரணை செய்தபோது மேற்சொன்ன விவரங்களை சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்பதாலும், எனக்கு ஏற்பட்ட மனஉளைச்சல் காரணமாகவும் உண்மை சம்பவத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை

**மறுவிசாரணை இல்லை.,**